முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 946

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.05.2022, திங்கட்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்கா போற்றி
ஓங்கார ஞானியே தேசிகா போற்றி
ஓங்காரன் சுப்ரமணியர் யானும்
உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசி தனை சுபகிருது தகர் திங்கள்
அருளுவேன் அரங்கன் சக்தி உலகம் அறிய
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 19ம் நாள், 02.05.2022 திங்கட்கிழமை)
அறியவே அரங்கனுள் யானிருந்து
அற்புதத்தை உலகமெங்கும் மாற்றம் செய்ய
3. வரமென நித்தம் அருளி வர
வையகத்தில் அரங்கன் நாமஜெபம்
ஜெபமது எந்த தேசத்தில் சிறப்புற
சக்தியாக பரவுகின்றதோ
4. பரவுகின்ற அனைத்துத் திக்கிலும்
பாடிடுவேன் பாதுகாப்பு மிகுதியாகும்
தரணியில் அரங்கன் தர்மத்தை
தன்னார்வ தொண்டு பெருக்கி உலகோர்கள்
5. பெருமைபட எங்கும் செய்து வர
பேருலகமே அமைதி பாதுகாப்பு மிக்க
மிக்கநல் பூமியாக மாறக்கூடும் பெருமைமிக்க அரங்கன் தொண்டுவழி
பேருலகமே ஞான ஆட்சி காணக்கூடும்
6. கூடவே அரங்கனுள் இந்த அற்புதத்தை
குறைவின்றி ஆறுமுகன் யான் நடத்தி வருகின்றேன்
நாடெங்கிலும் அரங்கன் நாமஜெபம்
ஞானிகள் பூஜை செய்து வந்தால் போதும்
7. போதுமப்பா உலகமாற்றம்
பிசகின்றி சடுதி காணக்கூடும்
கூடவே இந்த சக்திபெற
குறையில்லா உலகோர் தொண்டுவழி

8. நாடவேண்டும் அரங்கன் குடில் நோக்கி
ஞானதீட்சை பெற்று தொடர்ந்து வர
வருகவே மாற்றம் நடந்தேறும்
வையகத்தில் அரங்கனால் இந்த அற்புதம் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—